தென்னகம்

ஆசிரியர்: K.A. மதியழகன்

1

வெள்ளி | 23 – 10 – 59 | விலை 16 காசு

தில்லையில் தி. மு. க. விற்கு "நாற்பதாயிரத்து நானூறு" நண்பர்கள்! — K.A. மதியழகன்

சிதம்பரம் இடைத்தேர்தல் முடிவு வெளியாகி விட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் சட்டசபை நுழைவுச் சீட்டை பெற முடியவில்லை என்பதையும் தோல்வியடைந்துள்ளோம் என்பதையும் ஒப்புக் கொள்வதில் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது.

ஒன்றரை இலட்சம் வாக்காளர் உள்ள தொகுதியில் ஒரு இலட்சம் வாக்காளர்கள் வோட்டுச் சாவடிகளுக்குச் சென்ற தேர்தலை 'மந்தமான வாக்கெடுப்பு' என்று எதையோ நினைத்து எதையோ இரண்டு நாட்களுக்கு முன்பு எழுதிய விசித்திர பத்திரிகைகள், தி. மு. க. படுதோல்வி, சின்ன பின்னப் படுத்தப்பட்டது என்று திட்டுவதை பொருட்படுத்தவுமில்லை, கவலைப் படவும் இல்லை.

சின்னாட்களுக்கு முன்புபிரிட் [illegible] நடைபெற்ற தேர்தலில் [illegible]சி தோல்வியுற்றது குறித்து [illegible] அதன் தலைவர் கெயிட்ஸ்கல் நான்கு மணி நேரத்திற்கெல்லாம் கூறிய வாசகங்கள் நினைவிற்கு வருகின்றன.

"மக்கள் தீர்ப்பு வழங்கியுள்ளனர். அதை உணர்வு பூர்வமாக ஏற்றுக் கொள்கிறோம். மீண்டும் போராடி எங்களுக்குரிய வெற்றியை நிச்சயம் அடைவோம்"

ஆம்! மீண்டும் போராடி நமக்குரிய வெற்றியை நிச்சயம் அடைவோம். அதை யாராலும் தடுக்க முடியாது. தவிர்க்க முடியாது.

எந்த துறையில் சோடையாய் இருந்தாலும் தேர்தல் களத்தில்மட்டும் காங்கிரஸின் வல்லமையை அற்பமாக மதிக்க முடியாது என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். தவிர்க்கமுடியாத ஒரு ஜனநாயகக் கடமையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டதை மக்கள் உணர்வார்கள். அந்தக் கடமையை செய்வனே நிறைவேற்றியுள்ளது என்பது குறித்து மகிழ்வார்கள்.

சென்னை மாநாட்டுத் திறப்பாளர், தோழர். இராம. அரங்கண்ணல்

நாம் ஓர் பெரும் விடுதலைப் போரிலே ஈடுபட்டுள்ளோம் ஒருநாள் 'சாதகமோ', இலாபமோ போரிலே வெற்றி பெற்றதாகாது.

பாரத இராமயண கால கற்பனைப் போர்களே, பதினெட்டு நாட்கள், பதினெட்டு மாதங்கள் நடைபெற்றதாக புராணங்கள் கூறுகின்றன.

இந்தியாவின் விடுதலைப் போர் அறுபது ஆண்டுகள் நடைபெற்றன. அயர்லாந்து நாட்டின் உரிமைக் கிளர்ச்சி பல நூற்றுண்டுகள் படர்ந்தது. நூற்றுண்டுப்போர், முப்பதாண்டுப் போர், ஏழாண்டுப்போர் என்று ஐரோப்பிய மண்டலத்தில் போர்களுக்கேகாலத்தின் அளவை பெயராக அழைத்தனர்,

முதல், இரண்டாவது, மூன்றுவது மைசூர் யுத்தங்கள் முதல் இரண்டாவது கர்நாடக யுத்தங்கள் — இப்படி ஒரே போரில் பலஎண்ணங்கள் பெருகின,

சிதம்பரம் தேர்தல்குறித்து, புதுவையில் பூஜ்யம் கூறியவர் தில்லைக்கு ஏதாவது தேடக்கூடும்' அனல் ஒன்று மட்டும் புரிகிறது. நமது பணி வீண்போகவில்லை. நம் நம்பிக்கை ஒரு நாளும் நாசமாகாது, இப்படிப்பட்ட ஒவ்வொரு சம்பவமும், நம் முன்னே உள்ள பெரும் பணியையும், அதனை

(7–ம் பக்கம் பார்க்க)

"தனி உணவு மண்டலம்" கோரி டில்லிக்குக் காவடி!

சென்னை மாவட்ட தி. மு. க. மாநாட்டு ஊர்வலத்தில் ஒரு காட்சி

அசோக வனத்தில் அதிசயத் திருடன் !

காசி, இராமேசுவரம், மதுரை போன்ற பெரிய நகரங்களில் — யாத்திரீகர்கள் சூழ்ந்திருக்கும் பகுதிகளில் ஜேப்படித் திருடர்கள் இப்போது ஒரு புதிய மார்க்கத்தைக் கண்டுபிடித்திருப்பதாக நேரில் கண்டுவந்தவர்கள் தெரிவிக்கிறார்கள்.

மாணிக்கவாசகர் குதிரை வாங்கப்போன கதையை மனமுருக ஒருவன் பாடிக்கொண்டிருப்பானும் – அவனைச் சார்ந்த இன்னொருவன் சூழ்ந்திருக்கும் யாத்ரீகர்களின் சட்டைப்பைகளை காலி செய்துவிடுவானும். இது மதுரையில் நடக்கும திருக்கூத்து !

யுவதி ஒருத்தியை மரத்தடியில் அமர்த்தி, அவளுக்குஎதிரே அனுமானைப்போல் வேடமிட்ட அவன் தம்பி, 'ஸ்ரீராமன்' தெரிவித்த தகவலைத் தெரிவிப்பானும் – குழுமியிருப்போர் அனைவரும் கண்கலங்க மெய்மறந்து நிற்பார்களாம். அந்த நேரத்தில் அந்த யுவதியின் புருஷன் — ஸ்ரீராமனல்ல, உண்மையான புருஷன் மெய்மறந்து நிற்பவர்களின் 'பாக்கெட்'டுகளை சரி செய்து விடுவானும் – இப்படி இராமேசுவரத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறதாம் !

இதைப்போலவே காசிமாநகரில் பாவ புண்ணியங்களை ஒருவன் எடை போடுகிறான். இன்னொருவன் 'பாவாத்மா'க்களின் பணப் பைகளை எடை போடுகிறான்.

இதுபோன்ற 'பிக்பாக்கெட் ஓரங்க நாடகங்கள் இன்றையக் காங்கிரஸ் அரசாங்கத்திலும் தலையெடுத்து வெறியாட்டம் போடுகின்றன என்பதைத் தென்னகத்திற்குத் தெரிவிப்பதற்காகவே மதுரையை இராமேசுவரத்தை—காசியை அங்குள்ள நடைச் சித்திரங்களை நினைவுப் படுத்தியிருக்கிறோம்.

இன்றைய ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு மக்களைச் சந்தித்து மனம் திறந்துபேசுவதற்கு எந்தவகையிலும் மேடை கிடைக்கவில்லை என்பதை அவர்களே அறிவார்கள்.

ஜனவரி 26.
ஆகஸ்ட் 15.
அக்டோபர் 2.

—என்று இவ்வாறு அவர்களின் அன்பிற்கும், அரசியல் அடிமைத்தனத்திற்கும் பேர்போன தினங்களைத் தேர்ந்தெடுத்து அந்தநாட்களில் எதிர்க்கட்சிக் காரர்களைத் தூற்றித் திரிவதென்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

ஜனவரி 26 – அவர்களுக்குக் குடியரசு தினம். ஆனால் குடியரசைப் பற்றிப்பேசுவதில்லை; தியாகத்தை – தொண்டினை – பறை சாற்றுவதில்லை, தி. மு.கவாமே, அதைத் தொலைத்துக் கட்ட வேண்டுமென்கிறார்கள்.

இதைப் போலவே ஆகஸ்ட் 15ல் வெள்ளையரோடு போராடி உயிர்நீத்த உத்தமத் தொண்டர்களுக்கு வீர வணக்கம் செலுத்துவதைவிட்டு 'ஆகஸ்ட் 15ல் மேயர் ஏன் கலந்து கொள்ளவில்லை என்கிறார்கள்.

இப்போது அக்டோபர் 2 வந்திருக்கிறது. காந்தி ஜெயந்தி, கதர்வாரம் என்று ஊரெல்லாம் பிதற்றி வருகிறார்கள், மதுரையில் மாணிக்க வாசகர் புகழ்பாடி ஆள் திரட்டுகிறவர்களுக்கும் இராமேசுவரத்தில் இராமாயணக் கூத்தாடி ஏமாற்றுபவர்களுக்கும் காந்தியின் பெயரால் கதர் வாரத்தின் பெயரால் கூட்டத்தைக்கூட்டி எதிர்க்கட்சிகளை திட்டும் காங்கிரஸ் காரர்களுக்கும் வேறுபாடிருப்பதாகத்தெரியவில்லை. முன்னது மோசடி! பின்னது பித்தலாட்டம் ! சொல்லில், உச்சரிப்பில் களவு என்பதும், பொய் என்பதும் மாறுபாடுடையது என்பதற்காக ஒன்றுக்கொன்று உயர்ந்தது என்று கொள்வதா ?

எந்த விழாவில் அவர்கள் யாரைப் பற்றிப் பேசினாலும் நமக்குக் கவலையில்லை. ஆனால் கதரைப் பற்றிப் பேசுகின்ற–

தென்னரசு

விழாக் கொண்டாடுகின்ற நேரத்திலாவது இந்த நாட்டின்உடைப் பிரச்சினையைப்பற்றி தெளிவான கருத்தைத் தெரிவிக்கக் கூடாதா?

மானம், உணவு, உடை இவை மூன்றும் மனிதனுக்கு அத்தியாவசியமானவை.

மானப் பிரச்சினை வேண்டாம்; அதற்கும் காங்கிரசுக்கும் உறவில்லை.

உணவுப் பிரச்சினையில் காங்கிரஸ் படுதோல்விகண்டது என்பது வெளிப்படை. அந்நிய வெள்ளையன் காலத்தில் இருந்ததைப்போல் பதின்மடங்கு உணவுப் பொருள்களின் விலை ஏறிவிட்டது. முன்னைக் காட்டிலும் இப்போது உற்பத்தி அதிகம் என்கிறார்கள். சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் அயராத உழைப்பால் தரிசு நிலங்களெல்லாம் கழனிகளாகிவிட்டன என்று தலையை நிமிர்த்தி முரசு கொட்டுகிறார்கள். இருந்தும் உணவுப் பொருள்களின் விலை அதிகரித்துக்கொண்டு போவதின் ரகசியம் என்ன? மண்டிகளில் பதுக்கி வைக்கப் பட்டிருக்கிறதா ? கண்டுபிடிக்க நாதியில்லை !

மானம், உணவு இவை இரண்டுதான் இப்படி என்றால் உடைப் பிரச்சினையாவது தீர்ந்ததா? தீரவேண்டாம்; திட்டவட்டமான கொள்கையாவது இருக்கிறதா? இல்லை,

இந்த மாதம் முழுதும் காங்கிரஸ் முன்னேடிகள் கதர்விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

"கதர் தேசப்பொருளாதாரத்தை வளம் பெறச் செய்கிறது; கதரை எதிர்ப்பவர்கள் தேசத் துரோகிகள். மகாத்மாஜீ அவர்கள் கதரைஉயிரினும் பெரியதாக மதித்தார்கள்" என்று எல்லாக் காங்கிரஸ் காரர்களும் திக் கெட்டும் ஒலித்துக் கொண்டிருக்கிறார்கள். 'கேப்பையிலே நெல் வடிகிறது என்று சொன்னால் கேட்பவருக்குப் புத்தியில்லையா ?' என்று தமிழில் ஒரு முதுமொழி உண்டு. அதனைக் கவனப் படுத்தும் வகையில், கேப்பையில் நெய் வடிகிறதுஎன்று உரக்கக் கூவி காங்கிரஸ்காரர்கள் கலா நிகழ்ச்சி நடத்திக் கொண்டு வருகிறார்கள். கதர், எத்தகைய அரசியல் மகத்துவத்தை உள்ளடக்கிக் கொண்டிருந்தாலும், எப்பேர்ப்பட்ட உலகப் பெருந்தலைவரால் கண்டு பிடிக்கப்பட்டிருந்தாலும் இன்றைய தென்னகத்தில் அது விலைபோகாத அழுகற் பொருளாகி விட்டது என்பதைக் காங்கிரஸ் சிங்காதனம் [illegible] [illegible]

ஒரு காலத்தில் கதர், கட்சி ஆடையாகவே பேசப்பட்டு வந்தது.

காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சித் திட்டத்தில் மட்டுமே கதர்த் திட்டம் இடம் பெற்றிருந்தது.

ஆனால் இன்றைக்கு அதைத் தேசத்திட்டம், பொருளாதார வளர்ச்சித் திட்டம் என்று சொன்னால், கேட்பவர்களின்மூளையைப் பரிசோதிப் பதாகவே மக்கள் கருதுகிறார்கள்.

கதரைப் பற்றிப் புகழ்ந்துபேசி வரும் இவர்களுக்காவது கதராடையின் பேரில் உண்மையான பற்று இருக்கிறதா என்றால், உறுதியாகக் கூறலாம் கடுகளவுகூட அபிமானம் இல்லை என்று,

* * *

கதர் வாரத்திலே, கதரைப் பற்றிப் பேசும் காமராஜர், ஆண்டுக் கொருமுறை சென்னையில் கோலாகலமாக நடைபெறும் கைத்தறி விழாவிலே பேசும் போது என்ன கூறுகிறார் ?

"கைத்தறி நமக்கு வேண்டாதது; கதர்தான் நமது தேசத் துணிஎனவேகைத்தறியை வாங்காதீர்கள். கைத்தறி விழாவை இனிமேல் கொண்டாடக் கூடாது" என்று பேசி வருகிறார்? இல்லையே! "கைத்தறி தென்னாட்டின் குடிசைத்தொழில் இதை நம்பி ஆயிரக்கணக்கான ஏழைகள் வயிறு வளர்க்கிறார்கள். ஏழை பணக்காரர் எல்லோரும் அணிவதற்கான அழகுடன் இப்பொழுது கைத்தறித் துணி வந்துவிட்டது. எனவே கைத்தறியைத்தான் எல்லோரும் அணிய வேண்டும்". என்று பேசியல்லவா ஏழைகளைச் சிரிக்கவைக்கிறார். அவருக்கு அன்றைக்குக் கதர் நினைவு வராது !

காமராஜர் கோவை போகிறார் நண்பர்களை முதலாளிகளாகக் கொண்ட பெரிய பெரிய நூற்பு ஆலைகளைப் பார்வையிடுகிறார். அன்றுமாலை ஆலைத் தொழிலாளர் மத்தியில் தேனீர் அருந்துகிறார். பிறகு சொற்பொழிவாற்றுகிறார். அங்கு என்ன பேசுகிறார் ?

"சகோதரர்களே, உங்களுக்கெல்லாம் காங்கிரஸ் அரசாங்கம் வேறு வேலைகள் தரத் தீர்மானித்து விட்டது. ஏனெனில் இதுபோன்ற ஆலைகள் நாட்டில் பெருகுவதனால் நமதுதேசத்தின் கதர் திட்டம் பாழாகி விடுகிறது, காந்தியார் சாந்தியடைய வேண்டுமானால் முதலில் ஆலைகளை மூடிவிட வேண்டும். எல்லோரும் கதராடையே உடுக்க வேண்டும்" இப்படி பேசியதாக எந்தப் பத்திரிக்கையிலும் நாம் படிக்கவில்லை. "ஆலைகள் சர்க்கார் தயவில்தான் நடைபெறுகின்றன; பம்பாய் நகரத்தைப் போல் கோவை நகரிலும் ஆலைகள் பெருக வேண்டும். ஆலை முதலாளிகளும் சர்க்காரிடத்தில் நன்றி பாராட்டி நடந்துகொள்ள வேண்டும்" என்று பேசியதாகத்தான் தேசிய இதழ்கள் கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கின்றன, முதல்ாளிகளுக்குப் பக்கத்தில் இருக்கும்போது கதரும், கைத்தறியும் காமராசர் கவனத்திற்கு வருவதில்லை.

ஏன் இந்தக் குழப்பநிலை? காங்கிரசின் கொள்கைதான் என்ன? கதரா? கைத்தறியா? ஆலைத் துணியா?

புத்தமதக்கருத்துக்களை புவனமெல்லாம் பரப்பிய மாமன்னன் சக்கரத்தை ஆட்சிக்கொடியில் முத்திரையாக வைத்துவிட்டு, சீரங்கநாதனையும், சேங்கைக் கரைப் பிள்ளையாரையும் திறந்து வைப்பதைப்போல் நாட்டின் உடைப் பிரச்சினையிலும் ஆற்றிலொரு கால், சேற்றிலொருகால் என்று இருந்தால், கும்மிருட்டில் தத்தளிக்கும் இந்த ஆட்சித் தெப்பத்திற்குத் திசை காட்ட எந்த 'ஜோதி'யாலும் முடியாது. இதனால்தான் நமக்கு ஐயம் ஏற்படுகிறது. பிக்பாக்கெட்காரனைப் போல் பாட்டுப்பாடி, ஆட்டம் ஆடி ஜேப்படி அடிக்கத்தான் இதுபோன்ற கதர் விழாக்களே என்று!

காங்கிரஸ்காரர்களின் இது போன்ற 'அரசியல் சர்க்கஸ்' ஆட்டங்களைப் பார்த்தால், எதிர்க்கட்சிக்காரர்களைத் திட்டுவதற்காகத்தான் கதர்வாரம் கொண்டாடுகிறார்கள் என்றால் யார்தான் நம்ப மாட்டார்கள்!

தாயும் சேயும்

★

கணியூர் தோழர் கே. வி. தியாகராசன் அவர்கள் துணைவியார் திருமதி ராஜலட்சுமி அவர்களுக்கு ஓர் பெண் மகவு பிறந்துள்ளது, தாயும் சேயும் நலம்.



மலர் 1] [இதழ் 40

கண்ணும்பூச்சி விளையாட்டு !

நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்க கடந்தவாரம் சென்னையில் முதலமைச்சர் காமராசர் தலைமையில் சர்வகட்சிக் குழுவின் முதல் கூட்டம் நடைபெற்றுள்ளது. பிரஜா சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினரைத் தவிர மற்ற எதிர்க் கட்சிகள் எதுவும் விவாதத்தில் பங்கெடுத்ததாகத் தெரியவில்லை, அமைச்சர்கள் எதிர்பார்த்த அளவு கூட்டத்தில் உற்சாகம் காணப்படவில்லை.

" திட்டம் சரியாக நிறைவேற எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பது அவசியம். திட்டம் தீட்டுவதில் எல்லா அரசியல் கட்சிகளையும் கலந்தாலோசிக்காவிட்டால், திட்டத்தை நிறைவேற்றுவதில் மட்டும் அவை ஒத்துழைக்கும் என எதிர்பார்க்க முடியாது, ஆகவே அரசியல் கட்சித் தலைவர்கள் இந்தத் திட்டத்தை உருவாக்குவதில் அக்கறை காட்டும்படி அழைக்கிறோம்" என்று நிதியமைச்சர் சுப்ரமணியம் அவர்கள் அந்தக்கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திட்டமிட்டு முன்னேறுவது என்பது நமது நாட்டில் மட்டும் ஏற்பட்டுள்ள புதிய முறை அல்ல. பொருளாதாரத் துறையில் பின்தங்கிய [illegible]ம் கையாளும் வழி இதுதான். சோவியத் ரஷ்ய[illegible]டுகள் நாற்பது ஆண்டுகட்கு முன்பு எல்லாத் துறையிலும் பின்தங்கிய நிலையிலே காணப்பட்டது, வளம் இருந்தும் வறுமை கோலோச்சியது. பல்வேறு ஐந்தாண்டுத் திட்டங்களின் நிறைவேற்றத்திற்குப்பின்புதான் அந்த நாடுகளிலெல்லாம்பிரமாண்டமான, கனவில்கூட எண்ணிப்பார்க்க முடியாத வளர்ச்சியினைக்காணுகின்றோம்; சோவியத் ரஷியா போன்ற கம்யூனிச நாடுகளுக்கும், பார்லிமெண்டரி ஜனநாயகம் நிலவுகின்ற நமது நாட்டிற்கும் வேண்டுமானால் அடிப்படையில் ஒரு வித்தியாசத்தை காட்டலாம். அங்கெல்லாம் அரசாங்கமே தன்னிச்சையாக மக்களின் நலனை முன்னிட்டு நடவடிக்கைகளைத் துரிதமாக எடுக்க முடியும். திட்டங்களையும் விரைவில் நிறைவேற்ற முடியும். ஆனால் இங்கோ அந்த முறை பயன்படாது. ஒவ்வொரு செயலுக்கும் பாராளுமன்றம், மக்கள் ஆகியோரின் ஒப்புதலைப் பெற்றாக வேண்டும். எனவே திட்டங்களை நிறைவேற்றுகின்ற கால அளவு நீடிக்கலாம். ஆனால் அங்கெல்லாம் திட்டப்பணிகளில் மக்கள் கரைகடந்த ஆர்வத்தைக்காட்டி வருகின்றனர். அதற்குக்காரணம் உண்டு. திட்டத்தின் பயன்கள் அனைத்தும் தங்களின் சீரழிந்த வாழ்வைச் செம்மையுற பயன்படுத்துவதை அநுபவ பூர்வமாக உணர்கிறார்கள். எனவே முழு மனதுடன் ஒத்துழைப்பை நல்குகின்றனர். ஆனால் நமது நாட்டிலோ துவக்கத்திலிருந்தே திட்டப் பணிகளில் மக்கள் உற்சாகம் காட்டாத ஒரு சோர்வு மனப்பான்மையே காணுகின்றோம்.

'கரையான்' புற்றெடுக்க கருநாகம் குடி புகுவது போல் திட்டத்தின் நல்ல விளைவுகள் அனைத்தையும் சமுதாயத்தின் மேல் தட்டிலுள்ள வசதி படைத்த பகுதியினரே அநுபவிக்கின்றனர், இந்த நிலையினைக் கண்ட பிறகும் மற்ற பகுதி மக்களினால் எப்படி மனதார ஒத்துழைப்பை நல்க முடியும். மரம்வைப்பவன் ஒருவன் கனி பறிப்பவன் மற்றொருவன் என்ற கொடுமையான நிலையை எத்தனை நாளைக்கு மூடி மறைக்க முடியும், எனவேதான் உழைப்பாளிகளிடமும், விவசாயிகளிடமும் திட்டத்தைப்பற்றி எந்த வகையிலும் உற்சாகமோ, மன எழுச்சியோ காணப்படவில்லை, உழைப்பது நாம் - அதன் உறுபயனை அநுபவிப்பது மற்றொரு எத்தர் கூட்டம் என்ற எண்ணம் சிந்தையில் முகிழ்த்தால் எப்படி அவர்களால் மனதார ஒத்துழைப்பை நல்கமுடியும்.

நாடாளும் அமைச்சர்கள் திட்டத்தின் வெற்றிக்கு அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்புத் தேவையென வேண்டுகோள் விடுகிறார்கள். அவர்களின் வேண்டுகோள் நடைமுறையில் பிரதிபலிக்குமா என்ற சந்தேகம் நாட்டில் பலரிடம் உண்டாகியுள்ளது. கடந்த கால நடவடிக்கைகள் பல எச்சரிக்கைகளாக அமைந்துள்ளது. ஒத்துழைப்பை நாடுவது சொல்லளவில் மட்டும் இருக்கக் கூடாது, வார்த்தைகள் சுவையாகவும் கவர்ச்சிகரமாகவும் காணப்படலாம். ஆனால் அவை அனைத்தும் வெறும் எழுத்துக் கூட்டங்களாக மாறிவிடக் கூடாது, பல்வேறு சமயங்களில் சர்வகட்சிக் குழுக்கள் சர்க்காரின் முயற்சியினாலேயே அமைத்ததை நாடு நன்கறியும். அவைகள் எந்த நோக்கத்திற்காக உண்டாக்கப் பட்டதோ, அவைகள்செயல்பட்டதா என்பதுதான் நமதுகேள்வி? கமிட்டிகள் அமைப்பதுஎன்பது, பிரச்சனைகளின் வேகத்தைத்தடுத்து நிறுத்த கையாளப்பட்ட போர்த்தந்திரம் என்றுகூட பலரால் கருதப்பட்டது. அது உண்மையும்கூட. அரசாங்கமே முன்கை எடுத்து உருவாக்கப்பட்ட பல கமிட்டிகள் செயலற்றவைகளாக மாறிவிட்டதற்கு எண்ணற்ற சம்பவங்களை நம்மால் எடுத்துக் காட்டமுடியும்.

அமைச்சர் சுப்பிரமணியம் அமைத்திருக்கும் சர்வகட்சி குழுவின் பணி தனித் தன்மை பெற்றதாகும். சென்னை மாகாணத்திற்கான மூன்றுவது திட்டத்தை தயாரிப்பதுதான் அதன் அடிப்படை வேலை என்று கூறப்படுகிறது.

திட்டப் பொருளாதாரத்தில் நமக்கு ஆழ்ந்த நம்பிக்கைஉண்டு. பொருளாதாரத் துறையில் பின் தங்கிய நாடுகள் அனைத்தும் தனக்குள்ள வசதிகளைக் கணக்கிட்டு சாத்தியமான வகையில் செயலாற்றினால்தான் முன்னேற முடியும். மற்ற பின்தங்கிய நாடுகளின் சரித்திரமும் இதனைத்தான் சுட்டிக் காட்டுகின்றன. அந்த வகையில் நமது மாநிலமும் முன்னேற வேண்டுமானால் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டுமென்பதில் நமக்கு கருத்து வேறுபாடு கிடையாது.

ஆனால் டில்லி சர்க்காரின் விருப்பவர்களுக் கிணங்க திட்டம்போடுவதுதான் இக் குழுவின் வேலையே தவிர, நமது மாநிலத்தின் சகல நிலைமைகளையும் பரிசீலித்து, பின்பு திட்டம் தீட்டும் நிலை இல்லை. இதில் தான் நாம் கருத்து வேறுபடுகிறோம். திட்டக் குழுவினர் ஒரு குறிப்பிட்ட தொகையினை ஒதுக்குவர். அதனை எந்த வகையில் செலவிடுவது, எந்தத் துறையில் முதலீடு செய்தால் அதிக அளவு பலன்கிட்டும் என்பன போன்ற பணிகளை இக் குழுவினர் செய்வர்.

இதுபோன்ற காரியங்களை மட்டும் செய்வதற்கு சர்வ கட்சிக்குழு தேவையில்லை. அதனை இன்றைய ஆட்சியாளர்களே சாதிக்கமுடியும். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் அதனைத்தான் செய்தார்கள், இனியும் அம்முறையில் தொடர்ந்து செய்ய முடியும்.

எதிர்க்கட்சிகளின் மீது தவறான எண்ணத்தை மக்கள் மன்றத்தில் பரப்புவதற்காக இம் முயற்சியில் நாடாள்பவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். மாற்றுக்கட்சிகள் இதுவரையில் பல்வேறு சந்தர்ப்பங்களிம் தங்களின்உருவான யோசனைகளைத் தந்துள்ளன. அவைகளையெல்லாம் அலட்சியத்தோடு புறக்கணித்தே வந்துள்ளனர் என்பதனை நாடறியும். அவைகள் எல்லாம் அன்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. முதலமைச்சர் காமராசரும், மற்ற காங்கிரஸ் அமைச்சர்களும், தென்னகத்தின் பொருள்வளம் பெருகவேண்டுமானால் சேலத்து இரும்பையும், நெய்வேலி நிலக்கரியையும், காவேரி வட்ட எண்ணெய் வளங்களையும் மூன்றுவதுதிட்டத்தில் பயன்படுத்தினால் நமது தாயகம் வளம் கொழிக்கும் பூபாகமாகும் என்று கூறுகிறார்கள், இதனையேதான் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கரையுள்ள அனைவரும் பலமுறை எடுத்துச் சொல்லி வந்தாகள். அவைகள் அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்குபோல பயனற்று இருந்தது. காலம் கடந்து அவர்களின் உள்ளத்தில் இன்று அந்த உண்மை புலப்பட்டுள்ளது.

சர்வ கட்சிக் குழுவின் செயல்களை நாம் கண்ணும்பூச்சி விளையாட்டு என்றே கருதுகிறோம். டில்லியின் விருப்பு வெறுப்புக்களை நிறைவேற்ற மற்ற கட்சிகள் கருவிகளாகப் பயன்படவேண்டியதில்லை. டில்லி எஜமானர்களிடம் நல்ல பெயர் எடுப்பதற்காக, மற்ற கட்கியினரின் ஒத்துழைப்பையும் விரும்புகிறார்களே தவிர, உருவான காரியங்களை நிறைவேற்ற அல்ல இந்த முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருப்பது. நாட்டின் முன்னேற்றத்தில் உண்மையான அக்கரை கொண்டு தூய்மையான உள்ளத்தோடு மற்ற எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை நாடவில்லை என்பதே நமது முடிந்த முடிவு!

K.A.மதியழகன்

மேலப்பாளையம் பெரியவீடு !

2

நொய்யலாறு கிழக்கு நோக்கி ஓடிக்கொண்டுள்ளது. அதன் தென்கரையில் புதிய கோட்டை ஒன்று எழுந்தது. ஆனூர் என்பது அந்த இடத்தின் ஆரம்ப நாள் பெயர். அதுதான் காலமென்னும் கரம்பட்டு நமக்கு பழக்கப்பட்ட பழைய கோட்டை என்ற திருப்பெயரிலே வழங்குகிறது.

பாண்டிய மன்னனின் படைத் தலைவன் கரியான் சர்க்கரை என்பான். சோழனுக்கும் பாண்டியனுக்கும் நடந்த போரில் அவனது வீரதீரம் வெளிப்பட்டது. பாண்டிய மன்னன் அவனது ஆற்றலுக்கு அன்பளிப்பாக காங்கேய நாட்டு அதிபதியாக்கினான். அவர் வழி வந்தோர் அந்த மண்ணுக்கு மன்னராயினர். அவர் கொற்றம் நடந்தது கொடி உயர்ந்தது.

எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து அந்தக்குடியில் பிறந்தோர் கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த இருபத்து நான்கு நாட்டு வேளாளர்களுக்கும் தலைவராக பட்டம் சூட்டம்பெற்றனர். பட்டக்காரர் என்ற சிறப்புப் பெயரினை தங்கள் பெயருடன் இணைத்துக்கொண்டனர்.

ஐதர் அலி அரும்புமீசை வாலிபனாக, வளர்ந்துகொண்டிருந்த நேரம், ஆனூர்க் கோட்டைக்கு கொற்றவேல் சர்க்கரை மன்றாடியார் அரசரானார். தங்கமானவர் என்று ஊரார் பாராட்டினர். காங்கயத்தில் மணமுடித்தார். ஆனால் கோட்டை அரசனின் வாரிசாக அவருக்குக் குழந்தை இல்லை. இரண்டாந்தாரமாக் ஆரியப்பட்டியில் வேறோர்பெண் கொண்டார். அந்த அம்மைக்கும் சந்ததியில்லை. கொற்றவேலர் மனம் வாடினார், இந்தக் குறையைப் போக்க உறவினர் முறையில் இரண்டு பிள்ளைகளை எடுத்து வளர்ப்புப் பிள்ளைகளாக்கிக் கொண்டார். மூத்தாளிடம் ஒருவனும் இளையாளிடம் மற்றவனும் வளர்ந்தனர். பெரியவனுக்கு சேனாபதியென்றும் இளையவனுக்கு இரத்தினம் என்றும் பெயர்சூட்டினார்.

வயது வந்ததும் சேனாபதி ஆனூர் பட்டக்காரர் ஆனார். இரத்தின கவுண்டர் ஆனூருக்கு மேற்கேயுள்ள மேலப்பாளையம் என்ற ஊரில் பெருமையுடன் வாழ்ந்து வந்தார்.

மேலப்பாளையம் பெரிய வீடு! பெயருக்கேற்ற கம்பீரத்துடன் நின்றது. பேரூர் கோவிலில் காணப்படும் பெரிய பெரிய கற்தூண்கள். அதன்மீது பருத்தி மாரினால் வேயப்பட்ட அழகுப் பந்தல். கற்தூணைக் சுற்றி வளைந்து எழுந்துள்ள மல்லிகைக் கொடியின் மலர்கள் கம்மென்ற மணத்தை வா[illegible] தன. மல்லிகையின் [illegible] நிறம் வீட்டாரின் துல்லிய மனதினை சுட்டிக் காட்டியது. மல்லிகைக் கொடியின் தண்டு, அதை நட்டு நெடுநாளாகிறது என்பதை தெளிவாகக் காட்டியது.

"இரத்தின கவுண்டர் ஆனூர் பட்டக்காரராக இல்லாவிட்டால் என்ன, அவருக்கு என்ன குறை, ஐந்து பேர் மக்கள்மார். யாரைத்தான் சோடை, சொட்டை சொல்லமுடியும். குழந்தைசாமி —பெரிய இடத்துப் பிள்ளை போலவா தெரிகிறது. என்ன அடக்கம்! என்ன அமைதி. பிள்ளையென்றால் அப்படியல்லவோ இருக்கவேண்டும்!

தீர்த்தகிரி—இந்த குடும்பத்திற்கே நந்தா விளக்காவான். அவனது நடை, நொடி, பாவனை அப்படித்தான் சொல்லுகிறது.

பெரிய தம்பி, கிலேதார், குட்டிச்சாமி—அவர்களுக்கு தீர்த்தகிரி என்றால் என்ன மதிப்பு, அண்ணன் தம்பிகள் என்றால் இவர்களிடம் பண்பு பயில வேண்டும்.

மகள் மயிலாத்தாள்! என்ன குறை சொல்லமுடியும். அழகுக்கேற்ற அருங்குணவதி. உலகபுரத்தில் நல்ல சம்பந்தம் கிடைத்துள்ளது — இப்படிப் பேசி மகிழ்ந்தனர் ஊரார்.

இரத்தின கவுண்டர் கண்ணைமூடினார். புதல்வர்களில் குழந்தை சாமிக்கு ஆரியப்பட்டி தாய்மாமன் இல்லத்தில் மணமாகியிருந்தது. குட்டிசாமிக்கு [illegible] இடத்தில் பெண் எடுத்[illegible]கள். தீர்த்தகிரி, பெரிய தம்பி, கிலேதார் மூவரும் கலியாணமாகாத கட்டைகள். குழந்தைசாமியும் குட்டிச்சாமியும் தோட்டம் துரவுகளையும் காடுகரைகளையும் கவனித்து வந்தனர். விளைந்துள்ள பருத்தி எத்தனை பொதிபாகும்? வேப்பமரத் தோட்டத்தில் புதிதாக கிணறு தோண்டினால் புகையிலை பயிரிடலாம். இந்த ஆண்டு காளை மாடுகளின் 'தீவனத்திற்கு' காட்டையே நம்பிப் பலன் இல்லை, கரூர் நஞ்சைவெளியில் வைக்கோல் வாங்கவேண்டும்


சென்னை மாநாட்டு மேடையில் அறிஞர்

என்ற விபரங்களிலே கவலை செலுத்தினர்.

தம்பிமார்கள் மூவரும்செல்லப் பிள்ளைகளாயினர். தீர்த்தகிரி, இரண்டு தம்பிகளுக்கும் தலைவனானான். கட்டுமஸ்தான தேகமும், கண்டோர் மயங்கும் காந்தக் கவர்ச்சியும், தீர்த்தகிரியை வெகு விரைவில் அனைவருக்கும் அறிமுகப் படுத்தியது. மேலப்பாளையம் மந்தைவெளி சகோதரர்களின் விளையாட்டு மைதானமாகியது. அவர்களின் குதிரையின் குழம்படிச் சப்தம் கேட்டால் தாய்மார்கள் விலகி நின்றனர். குமரிப் பெண்கள் பெருமூச்சு விட்டனர். கால் கட்டை விரலில் தரையில் கோடிழுத்தனர். கலியாண வயதுடைய பெண்ணின் பெற்றோர், மேலப்பாளையம் பெரியவீட்டு சம்பந்தம் கிட்டுமானால், என்னகாணிக்கை செலுத்தவும் தயாராயினர்.

அன்று ஆடிப் பதினெட்டு. பவானி கூடுதுறையில் ஒரே மகளிர்கூட்டம். காவிரியும் பவானியும் கலக்கும் கட்டத்தில் காவிரியில் கலக்குவதற்காக கொங்குநாட்டுக் குமரிகள் 'முளைப்பாரி' கொண்டு வந்திருந்தனர். நவதானியங்களின் முளைகள் விட்ட தட்டுகளை அவர்கள் கரங்களிலே ஏந்தி நகரத் தெருக்களிலே உற்சாக சிந்து பாடி வந்தது அலாதியாக இருந்தது. வானம் பொத்துக்கொண்டிருந்ததால் காவிரியின் பிரவாஹம் பேரிரைச்சலுடன் சென்றது. பவானியும் அதனுடன் போட்டியிட்டது. இன்னும் சில மணி நேரங்களில் பவானி நகரம் மூழ்கிவிடுமோ என்று அஞ்சினர்.

கூடுதுறையில் ஒரே கும்மியும் கொம்மாளமுமாய் இருந்தது. புத்தாடை புனைந்து, நற்ச[illegible] பூசி, மலர்க்காடெனத் தக்க பூக்களை கூந்தலில் சூடி அழகுக்கு அழகு சேர்த்தனர் ஆரணங்குகள்.

திடீரென்று கரையில் ஓர் குதிரைவந்து நின்றது. மேடையை கடந்து எதிர்க்கரையை நோக்கினான்.

இந்த பெருவெள்ளத்தில் எந்த பைத்தியக்காரன் காவிரியில் இறங்குவான்? இப்படி யாரும் சொல்லவில்லை, அவன் தோற்றத்தைக்கண்டு நினைத்தனர், எல்லாப் பாறைகளையும் மறைத்துக்கொண்டு காவிரி சிறிக்கொண்டிருந்தது.

திடீரென்று தண்ணீரில் குதித்தான் அந்த வாலிபன், கும்மியும் கொம்மாளமும்நின்றது. பவானி காவேரியின்பேரிரைச்சலைத்தவிற வேறு சப்தம் இல்லை.

"என்ன ஆவானோ, எதிர்க்கரைச்சேரவா போகிறான். யார் இந்த துடுக்குக்கார இளைஞன், அவனைப் பெற்ற அன்னை எவ்வளவு வருந்துவார்கள்" – தாய்மார்களின் கருணைப் பேச்சு.

வாலிபன் காவிரியின் நடுவே தத்தளித்தான். சுழலில் அவன் மூழ்கி விட்டான் என்று கருதும் நேரத்தில் அவன் தலை வேறோர் இடத்தில் தெரிவதுமாக அரை மணி நேரம் நடந்தது. பயங்கரமான சோக நாடகத்தைப் பார்க்கும் உணர்வு அவர்களுக்கு இருந்தது. கடைசியாக கைகள் ஓய்ந்து, பாறை மோதியதால் தலையில் காயத்துடன் கரை சேர்ந்தான்.

"வேறு எவனும் இவ்வளவு நேரம் நீந்தியிருக்க மாட்டார்கள். யார் இவன்?" என்று ஏககாலத்தில் குரல் எழுந்தது.

தெற்கே போய்வந்த ஒருவன் சொன்னான், இவர்தான் ஆனூர் குடும்பத்தார் – மேலப்பாளையம் பெரியவீட்டுப் பிள்ளை–தீர்த்தகிரி என்றான்.

ஊமையாக நின்றவர் உதவிக்கு ஓடோடி வந்தனர்.

ஆனூர்க்கோட்டை. ஐதருக்கு இனிஅடங்கிடக்காது. கொங்கு நாட்டானின் கொடி இனி கோட்டை கொத்தளமெங்கும்பறக்கும். வீரன் தோன்றி விட்டான். விடிவெள்ளி உதயமாகி விட்டது. இருள் கலைகிறது என்று சகலரும் பேசிக் கொண்டனர்.

குறிவைத்தான் தீர்த்தகிரி. ஏரிக் கரையிலேயிருந்த நாரைக் கூ[illegible] பொல பொ[illegible]வென [illegible]ன. இன்று காலை செ[illegible] ப[illegible]த்தாக்கிலே பார்த்தோம். இன்று பகல் தாராபுரம் அருகே அமராவதிக் கரையிலே புரவியுடன் நின்று கொண்டிருந்தான். மாலை கருமலைச்சாரலிலே பார்த்தேன் என்று பேசிக் கொண்டனர்.

கொங்கு நாட்டின் வடக்கு எல்லையிலே கும்பினியாருக்கும் மைசூரானுக்கும் கடும்போர் நடந்து கொண்டிருந்தது. கோவைக் கோட்டத்தின் மீது மைசூரின் பிடிப்பு இருந்தது. சங்ககிரிக்கோட்டை, சத்தியமங்கலம் கோட்டை ஆகியவை மைசூர் அரசின் கேந்திரங்கள்.

மாநாட்டுத் தலைவர் டி. கே. சீனிவாசன்.
மாநாட்டுத் திறப்பாளர் இராம. அரங்கண்ணல்

கோவைக்கோட்டத்தின் தலைமை அதிகாரி சங்ககிரிக்கோட்டையில் கொலு வீற்றிருந்தான்.

ஒரு நாள் சிவன் மலையருகே தீர்த்தகிரி குதிரைமீது சென்று கொண்டிருந்தான். எதிரே ஓர் குதிரை வீரன் குறுக்கிட்டான். அவன் கையிலே பண மூட்டை இருந்தது.

"நீ யார்?" என்றான் தீர்த்தகிரி. 'வரி வசூலிப்போன்' என்றான் வழிப்போக்கன். "யாருக்கு?"– இது தீர்த்தகிரியின் கேள்வி. "இதுகூட தெரியாதா, தம்பி! கோவை கோட்டம் மைசூர் அரசாணைக்குக் கட்டுப்பட்டது.சங்ககிரிக் கோட்டையில் மைசூர் மன்னனின் அதிகாரிஇருக்கிறார். பார்த்தால் விபரம் புரிந்தவன் போல் தோன்றுகிறாய்: இது கூட தெரியாதா! நேரமாகிறது, கொஞ்சம் விலகி நில்" என்றான்.

"வரி வசூலிப்போனே! நான் கூறும் விபரத்தைத் தெரிந்து கொள், கொங்கு நாட்டில் ஆண்மையே பட்டுவிட்டது என்று மைசூர் மன்னனின் எண்ணமா? கோழைகளின் கூடாரமல்ல கோவைக் கோட்டம். குமுறும் உள்ளங்கள் இங்கு உண்டு. என்பதைத் தெரிந்துக்கொள். உன் மன்னனிடமும் தெரியப் படுத்து. அது கிடக்கட்டும் பண முடிப்புபையைஇங்கே கொடு" என்றான்.

குதிரை வீரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. வியர்த்துவிட்டது. எவவளவோ முறை அந்தப் பாதையில் பணமுடிப்புடன் சென்றுள்ளான். எவரும் இப்படிப்பட்ட கேள்விக் கணை தொடுத்ததில்லை. எனவே பயத்தால் பேசினான்.

"தம்பி! நான் ஊழியம் செய்து வயது வளர்க்கும் பணியாள். என்னை மிரட்டி என்ன செய்வது? நான் வெறுங்கையோடு போனால் சும்மா விடுவார்களா. பெண்டு பிள்ளைக்காரன்.என்னை விட்டுவிடு. நேரமாகிறது. வருகிறேன்" என்றான்.

"கொங்குநாட்டு உழவர் விதைக்கிறார்கள். அறுக்கிறார்கள். மைசூருக்கு வரிப்பணம் கொட்டி யழுவது என்ன நியாயம்? எனக்கு தெரிந்து ஒரு வெள்ளிப் பணமும் போவதை நான் அனுமதிக்கமாட்டேன்" என்றான். மேலும் தீர்ததகிரி என்னை யார் என்று கேட்கிறாயா, சொல்கிறேன் கேள்.

"சென்னிமலைக்கும் சிவன் மலைக்கும் நடுவில் உள்ள சின்னமலை வாங்கிக்கொண்ட[illegible]தாகச் சொல்" என்றான். வெறும் கையோடுகுதிரை வீரன் சங்ககிரிக் கோட்டை சென்றான். விபரம் கேட்ட கோட்டை அதிகாரியின் கண்களிலே கோபக் கனல் வீசியது.

அவமானம் நடந்த திசையை நோக்கி சிறுபடை கிளம்பியது.

தீர்த்தகிரியிடம் அதனை எதிர்க்கும் ஆற்றல் வாய்ந்த படை இல்லை. சங்ககிரி கோட்டையான் சேனையை எதிர்த்து தீர்த்தகிரிக்கு துணைபுரிய வேறோர் படையும்அதேநேரத்தில் வந்தது. யார் அந்தப் படை?

[தொடரும்]



றுவும், கழக முன்னணி வீரர்களும் (புகைப்படம்: 'முரசொலி')

வியர்வை சிந்திடுவோர் ! வேலையின் வேந்தர் !

"புதுமதியன்"

அயற்கருப் பங்காட் டுச்சிமேல் தென்றல்
அசைந்துபின் நெலவயல் புரண்டு
நயமொடு மஞ்சட் கொத்திலை கொஞ்சி
நடந்துவந் தென்னுடல் நீவிக்
கயமலர்க் கன்னி காத்திருப் பாள்போய்க்
களிசெய வேண்டுமென் ளுேடும்
வயல்வெளி நடுவில் நீள்வரப் பேறி
மனக்களிப் பொடுநடந் தேன்நான் !

பந்தியாய் உள்ள தென்னையின் தோப்பு !
பளிங்கெனும் நீர்நிலை யோரம்
அந்தியின் வண்ணம் அழகுறப் பாய்ந்தோர்
ஆடிபோல் தோன்றிடக் கண்டேன் !
மந்தியோன் றங்கே குருவியின் கூட்டை
மடலொடு பிய்த்திடும் ! குயிலின்
செந்தமிழ்ப் பாடல் தென்றலின் ஓடம்
செலுத்திவந் தென்செவி பாயும் !

சேற்றிலே காலைத் துயரொடு புதைத்துச்
செய்யுழும் ஆவினச் சோர்வை
மாற்றிடத் தென்பாங் கிசைத்திடும் உழவர்
வாய்வழிந் தொழுகிய பாடல்
காற்றிலே நீந்திக் கரைநிற்கு மென்றன்
காதிடை இனிமையாய்ப் பாயும் !
போற்றினேன் நெஞ்சு பூரித்து விம்மப்
புவியெலாங் காத்திடும் அவரை !!

மடையிலே வெள்ளம் புகுந்திடும் ஓசை !
மாறியே துள்ளிடும் கெண்டை !
இடையிலே நாரை கண்களை மூடி
இருந்திடும் பொய்த்தவக் கோலம் !
தடையிலா வானில் துணையுடன் புட்கள்
தக்கபண் ணிசைத்தவா றேகும் !
விடைதனைப் பெற்ற பரிதியோ மெல்ல
வீழ்ந்திடும் மேற்றிசை வானில் !!

கொண்டலின் மீது கதிரொளி யேறிக்
கொண்டதால் பொன்விளிம் பென்னக்
கண்டவர் நெஞ்சம் உவகைகொண் டாடக்
கழனிவிட் டுழவரில் லேகப்
பெண்டிரோ கட்டுப் புல்லொடும் வாழை
பெற்றதா ரேடுபல் கீரை
கொண்டுமுன் னேகு 'ஓங்கிவாழ்' கென்று
கூடியே தவளைகள் வாழ்த்தும் !

காலையிற் பிரிதி வந்திடா முன்னும்
கதிரவன் வீழ்ந்ததன் பின்னும்
வேலைசெய்கின்ற தொழிலுக்கு வேந்தர்
வியர்வையின் துளிகள்சிந் திடுவோர் !
மாலையும், வாழ்த்தும், வேண்டிடாத் தொண்டர்
மண்ணிலே உழவர்தாம் என்றே
சாலைமேல் ஏறினேன்நெஞ்சு பொங்கச்
சார்ந்தவர் பின்னடந்தேன் நான் !!

விழிப்புணர்ச்சி தேவை !

கிருஷ்ணசாமி, பி. ஏ. (ஆனர்ஸ்)

அக்டோபர் ஏழாம் நாளன்று ஈராக் நாட்டுப் பிரதமர் அப்துல் கரீம் காசீமை படுகொலை செய்ய சிலர் முயன்றிருக்கிறார்கள், ஈராக் குடியரசு பிறந்து முழுக்க ஓராண்டுகூட ஆகவில்லை, அதற்குள் அதனை அரும்பிலேயே கருக்க பலர் சதி வேலைகளில் ஈடுபட்டுள்ளனர், குறுகிய இந்த நேரத்தில் நான்குமுறைக்குமேல் அழிக்க திட்டமிட்டிருக்கின்றனர். எதுவும் வெற்றிபெறவில்லை.

பிரதமர் காசீமைப் பொறுத்தவரையில் இதுபோன்ற காரியங்கள் சர்வ சாதாரணம். பல இடுக்கண்களைச் சந்தித்த பின்பே குடியரசின் முதல்வராக பதவியேற்றுள்ளார். துவக்க நாட்களில் அவருடன் புரட்சிப் பணியில் ஈடுபட்ட துணைப் பிரதமர் கலோனல் அரீப், ஐக்கிய அரபுக் குடியரசுடன் ஈராக் ஒரு அங்கமாக இணையவேண்டும் என்று வாதாடி, குழப்பம் செய்ய முயன்றார். அதன் விளைவாக அவர் காரக்கிரகத்திற்கு அனுப்பப் பட்டார். அது மட்டுமல்லாமல் கருத்து வேறுபாடு கொண்டு அவரின் அமைச்சரவையிலிருந்து பலர் விலகினர். அப்போதெல்லாம் கூட மன உறுதி தளராதவர் பிரதமர் காசீம்.

சதிக்கு யார் கார[illegible] இன்னும் தெ[illegible]வாக[illegible]ய வில்லை, கொலை செய்ய முயன்ற சதிகாரர்களில் ஒருவன் கொல்லப்பட்டிருக்கிறான். மற்றும் மூவர் பிடிபடாமல் தப்பித்துக் கொண்டதாகச் சேதி கூறுகிறது. ஏகாதிபத்யத்தின் ஏஜண்டுகள்தான் இந்தப் பயங்கரச் சதிச் செயல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று ராணுவ அதிகாரிகள் பலர் யூகிக்கிறார்கள். நிச்சயம் அந்தத் துரோகிகளைக் கண்டு பிடிப்போம் என்றும் உறுதி பூண்டுள்ளனர்.

'பாக்தாத் ஒப்பந்தம்' என்ற ராணுவ ஒப்பந்தத்தால் மத்திய கிழக்கு நாடுகளில் மேற்கத்திய வல்லரசுகள் பலமான பிடியினை வைத்திருந்தன. காசீமின் அரசியல் நுழைவு அவர்களின் சதிச் செயல்களுக்கு துணைபுரிய மறுத்துவிட்டன. ஆட்சி பீடம் ஏறியவுடன் பிரதமர் காசீம் செய்த முதல் காரியம் 'பாக்தாத்' ராணுவ ஒப்பந்தத்திலிருந்து ஈராக் குடியரசின் தொடர்பை துண்டித்துக் கொண்டதுதான். இச் செயலின் வாயிலாக மேற்கத்திய ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திற்கு சாவோலை தீட்டினார். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, மக்களை மிகக் கேவலமாக நடத்திய ஒரு அரசை நீக்கினார். இவை பிற்போக்குச் சக்திகளுக்கு துவேஷ உணர்வை உண்டு பண்ணியிருக்கக் கூடும்.

ஈராக் நாட்டைப் பொருத்தவரையில் தேசீய ஜனநாயகக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் மக்களின்நம்பிக்கையினைப்பெற்ற கட்சிகளாக விளங்குகின்றன. இந்த இருகட்சிகள்தான் பிரதமர் காசீமை ஆரம்பம் முதலே ஒரு மனதுடன் ஆதரித்துக் கொண்டுள்ளன.

ஈராக் பிரதமர் அப்துல் கரீம் காசீமை கயவர் தாக்கினர் என்ற சேதி கேட்டவுடன் மக்கள்நடந்து கொண்ட முறைகள் அவருக்கு மக்களிடத்தில் உள்ள உயர்ந்த இடத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆட்சிப் பொறுப்பிலுள்ள வெகு சிலரால்தான் இத்தகைய நிலையைப் பெற முடியும். கட்டிளம் வாலிபன் ஒருவன் தன்னுடைய வண்ணமேனியால்குண்டுகள் பாய்வதினின்றும் தடுத்திருக்கிறான். மற்றுமொரு மனம் உருக்கும் சேதி – பிரதமர் காசீம் ஏறிவந்த மோட்டார் காரின் டிரைவரும் தாக்கப் பட்டான். வலி தாளாமல் தலை சாய்த்தான். தூரத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்த டாக்ஸி டிரைவர் ஒருவன், ஓடோடி வந்து, குண்டடி பட்ட கார் டிரைவரின் இடத்திலமர்ந்து, பிரதமரைமருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றான். மக்களிடம் அவருக்குள்ள அன்புதான் அவரைச் சாவினினறும் [illegible]காப்பாற்றியது. இல்லையென் [illegible] சதிகாரர்கள் கெட்டிக்காரர்களாகியிருப்பார்[illegible].

உலகிலுள்ள பல் வேறு நாடுகளுக்கும் ஈராக் பிரதமர் காசீமைக் கொல்ல முயன்ற முயற்சி அதிர்ச்சியினைத் தந்துள்ளன. கடிதங்கள் மூலமாக தங்களின் ஆழ்ந்த அனுதாப உணர்வுகளைத் தெரியப் படுத்தியுள்ளனர். சோவியத் பிரதமர் குருசேவ்வின் சேதி பல்வேறு உண்மைகளை படம் பிடித்துக் காட்டுகின்றன. "நேற்றையதினம் இலங்கையிலிருந்து பண்டாரநாயகாவின் துயரச் சேதியினைக் கேட்டோம். இன்றோ, கொலை முயற்சிக்கான அவலச் சேதி ஈராக்கிலிருந்து வருகிறது. கீழ்த்திசை பகுதிகளிலுள்ள நாடுகள் தங்களின் கரங்களைப் பூட்டியுள்ள அடிமைத் தளைகளை உடைதெறியும் விடுதலை உணர்வை ஏகாதிபத்திய வாதிகளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தங்களின் நெடு நாளைய ஆதிக்கம் தவிடு பொடியாகிறதே என்பதற்காக அஞ்சுகிறார்கள். அதன் எதிரொலியாக ஆத்திரப்படுகிறார்கள். அந்தத் தீய சக்திகளின், அழிவு வேலை என்ற சங்கிலியின் ஒரு இழைதான் காசீமை கொலை செய்ய முயன்ற முயற்சி. துரோகிகள் எந்த வேடத்திலிருந்தாலும் அவர்களின் முகத்திரைகிழிக்கப் படும். என்றாலும், மக்களும்விழிப்புடனிருந்து பிற்போக்குச் சக்திகளின் செயல்களை தூள் தூளாக்க வேண்டும்" என்று தனது சேதியில் குறிப்பிட்டுள்ளார்.

பத்திரிகா தர்மமே! — நீ பதில் சொல்!

இக்காலத்தில் எந்தச் செய்திப் பத்திரிக்கையைப் புரட்டினுலும், கொலை, களவு செய்திகளைவிட இந்நாட்டை ஆளும் நாயகர்களின் பவனியையும், அவர்கள் சிந்துகின்ற 'முத்துக்களையுமே' (முத்துக்களை என்பது அவர்கள் பேசும்போது தெறிக்கின்ற எச்சில் என்று நீங்கள் நினைத்துக்கொண்டால் அதற்கு நான் பொறுப்பாளியல்ல!) சுமந்து வருகின்றன. அதுவும் அகிலத்தின் பெரும் பகுதியின் கவனத்தை காந்தம்போல் கவரும், ஐசனேவரும், குருஷேவும் உதிர்க்கின்ற மணிமொழிகளைவிட இந்திய உப கண்டத்தை ஆளும் வாய்ப்புப் பெற்ற மண்டலாதிபதிகளின் மணிவாசகங்களே நிரம்பிகிடக்கின்றன.

பாராளுமன்றத்திலே அவர்கள் செய்யும் கர்ஜனையை மட்டுமல்ல; ஊர்கோடியிலே, குப்பை மேட்டிலே, சந்தை வெளியிலே அவர்கள் உதிர்க்கின்ற "வீரவுரை"களையும், பிரசுரித்து பத்திரிக்கைகள் ஆளவந்தார்களின் பாராட்டுதல்களைப் பெறுகின்றன. அதில் வியாபாரநோக்கம் புதைந்து கிடக்கிறது ஊராள்வோரின் நடவடிக்கைகளை பிரசுரிப்பதால் தாராளமாக கிடைக்கிறது; அதனுல் பத்திரிகைக்கும் ஏராளமான வருவாய் கி[illegible]கிறது என்ற தொழில் இர[illegible]யம் அறிந்தவர் மட்டுமே ஆச்சரியப்பயமாட்டார்கள். ஆளவந்தார்களின் செய்திகளை பத்தி, பத்தியாய் பத்திரிக்கைகள் பிரசுரிப்பதைக்கண்டு இந் நாட்டில் இருக்கின்ற பத்திரிக்கைகள் கடைப்பிடிக்கின்ற முறையை சற்று விளக்க முற்பட்டதற்குக் காரணம், பெருப்பாலானபெரும் பத்திரிக்கைகள் 'அரசாங்கப் பிரசார இலாக்கா' பணியையே புரிகின்றன — நாட்டை ஆளும் நாயகர்களின் புகழ்பாடியே வாழ்கின்றன—ஆளும்கட்சியின் செய்திகளை மட்டுமே பிரசுரிப்பதென்ற முடிவோடேபத்திரிக்கை ஆசிரியர்கள் பேனவை எடுக்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டவே, அதுமாத்திரமல்ல, நாட்டிலே நடைபெறுகின்ற நானுவித நிகழ்ச்சிகளையும் பிரசுரிக்க வேண்டிய பத்திரிக்கைகள்; நாம் சார்ந்துள்ள இயகத்தின் நடவடிக்கைகளை சரிவர பிரசுரிப்பதில்லை.

ஆளவந்தார்களின் அன்றாடச் செய்திகளை பக்கம், பக்கமாக பிரசுரிக்கின்ற பத்திரிக்கைகள், மற்ற அரசியல் தலைவர்களின் நிகழ்ச்சிகளையும், நடவடிக்கைகளையும், சரிவரபிரசுரிப்பதில்லை. அதுமாத்திரமல்ல, முற்றிலும் உண்மைக்குமுரணுக திரித்து பிரசுரித்து மக்கள் மனதிலே மாசை கற்பிக்கும்பெரும்பணியிலும் ஈடுபட்டுள்ளன, இதோ ஒரு உதாரணம்ஆயிரமாயிரம் தொழிலாளர்களின் வயிற்றில்லடித்து, அவர்களின் அழு குரலிலே ஆனந்தத்தைக் கர்ணும்வடநாட்டு முதலாளி கோயங்காவின் பத்திரிக்கையாகிய 'தினமணி' அண்மையில் வெளியிட்டுள்ள செய்தியை எடுத்லுக்காட்ட விரும்புகிறேன்.

13-10-59 தேதி வெளியூர் 'தினமணி' யில், 'கோவில்பட்டி தி. மு. க. கலைக்கப்பட்டது' என்று ஒரு செய்தி பிரசுரமாகியிருக்கிறது. நுனிப்புல் மேய்வதைப்போல் பத்திரிக்கை படிப்போர் இச்செய்தியைக் கண்டதும் என்ன நினைப்பார்கள்? 'கோவில்பட்டியில் கழகம் கலகலத்து விட்டது'— என்று தானே எண்ணுவர். அந்த தலைப்பின் கீழ் வெளியாகியுள்ள செய்தியைக் கவனியுங்கள்.

"கோவில்பட்டி அக்டோபர் 8. கோவில்பட்டி அழகிரி திடலில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக்கழகம் பொதுக் கூடத்திற்கு நகர பஞ்சாயத்து உறுப்பினர் ஸ்ரீ. பொன்னுசாமி தலைமை வகித்தார், ஸ்ரீமான்கள் பி. ஜெயசந்திரன், பூவண்ணன், கலிங்கன், முதலியோர் பேசிய பின் கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன்பேசுகையில் நாட்டில்பிரிவினை உணர்ச்சி வலுத்துவருவதாகவும், இந்தியா ஐ[illegible] துண்டுகளா[illegible]ப் பிரிந்துவிடுமென்றும், வருங்காலம் நாட்டில் தி. மு. க. விற்குப் பெருத்த அளவில் ஆதரவு இருக்கும் என்றும் நேருவுக்குப்பின் அண்ணுத்துரைக்கே மதிப்பிருக்குமென்றும் பேசினர்" இந்த செய்திக்குத்தான், கோவில்பட்டி தி. மு. க, கலைக்கப்பட்டது என்று மகுடமிட்டிருக்கிறது வடநாட்டு சேட்டுப்பத்திரிக்கை. வெளியாகியுள்ள செய்திக்கும், இந்த தலைப்புக்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதா? எதிர்க் கட்சியின்மீது மாசு கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு 'விஷம' தலைப்பிட்டு, செய்திகள் திரித்து தரும் கைங்கரியத்தை இந்நாட்டு பத்திரிக்கைகள் செய்கின்றன என்பதற்கு வேறு எடுத்துக் காட்டுத் தேவையா?

சென்ற சனி—ஞாயிறு, இங்கு நடைப்பெற்றது சென்னைமாவட்ட தி. மு. க. மாநாடுதான்.

அந்த மாநாடு, சீறும், சிறப்போடு நடைப்பெற்றது. இலட்சு கணக்கானேர், வாட்டும் வெயிலையும் பொருட்படுத்தாமல், கொட்டும் பசியையும் புறக்கணித்து, அங்கு கூடியிருந்தனர். தாய்மார்கள், அவர்களின் கரங்களிலே அன்பு செல்வங்கள். அந்த காட்சி — எந்த இயக்கத்திற்கும் கிடைக்காத காட்சி! கொள்கை, கொள்கை என 'வெறி' பிடித்து அலையும் இளங்காளைகளின் பாசறையாக விளங்கியது அம் மாநாடு. இரண்டு நாட்கள்! ஈடுஇணையற்று ஜொலித்தது! மற்றகட்சிக்காரர்கள்நடத்தும்மாநாடுப்போல் அல்ல இது; இந்த மாநாட்டிற்கு கட்டணம் உண்டு. காசைக் கொடுத்து கொள்கை விளக்கம் பெறும் புதுமை, தி. மு. கவுக்கேயுள்ள தனிச் சிறப்பு. அந்த இரண்டு நாட்களிலும் வசூலானத் தொகை ஐம்பதினுயிரம் உலக சரித்திரத்தை புரட்டும் நீ வேறு எந்த நாட்டிலேயாவது இந்த புதுமையைக் கண்டிருக்கிருயா? அவ்வளவு சிறப்பாக நடைபெற்ற மாநாட்டின் செய்திகளை தலைநகரில் நடைபெற்ற மாநாட்டை, எந்தப் பத்திரிக்கை ஒழுங்காக பிரசுரித்திருக்கிறது? ஏதோ 'ஒப்புக்கு' பிரசுரிக்க வேண்டுமே என்ற கட்டாயத்தின் பேரில் அரைப்பத்தி, கால் பத்தி என்ற வகையில் பிரசுரித்திருக்கின்றன. இது எதைக் காட்டுகிறது? ஆளவந்தாருக்கு எதிராகயுள்ள கட்சியின்நிகழ்ச்சிகளை நாட்டு மக்கள் சரிவர அறிந்துக்கொள்ளக் கூடாது என்பதைத்தானே? இது முறையா? நீதியா? நியாயமா? பத்திரிக்கா தர்மமா? சிந்தித்துப்பார், இந்த செங்கோலேந்திகளின் பாதம் தாங்கிகளின் பாதகச் செயலை! எதிர் கட்சிகளை இருட்டடைப்புச் செய்யும் இவர்கள் ஆளவந்தார்களின் சாதாரண நிகழ்ச்சிகளை கூட பூதக்கண்ணுடியில் படம் பிடித்து மக்கள் மன்றத்தின் முன் வைக்கின்றனர். பத்து பதினைந்துப்பேர் நிரம்பிய கூட்டத்தில் அமைச்சர் பேசும் சொற்பொழிவை பத்தி, பத்தியாக பிரசுரிக்கின்றன! பாவம்! அமைச்சர்களின் சிந்து - பாடும் காவடிக்காரர்களாகி விட்டார்கள் இந் நாட்டு பத்திரிக்கையாசிரியர்கள்.

ஆளும் கட்சியை ஆதரிப்பதே தனது கடமை என்ற முடிவோடு இயங்குகின்றன இந் நாட்டு பத்திரிக்கைகள் என்ற என் குற்றச்சாட்டு உண்மைதான் என்பதைஇப்பொழுது நீங்கள்பூர்ணமாக உணறுவீர்கள் அல்லவா?

பத்திரிக்கா தர்மமே நீ பதில் சொல்!

தில்லையில் தி. மு. க. விற்கு...!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பதற்கு நாம்பெறவேண்டிய ஆற்றலையும், வெற்றி கொள்ளவேண்டிய எதிரியின் வல்லமையையும் நன்கு உணர்த்துகிறது. பெறத் தவறியவைகளை விட்டு, இனிபெற வேண்டிய வெற்றிகளைக் குறித்து நமது சிந்தனையும் செயலும் செல்லட்டும்.

விடுதலை இயக்கம் பல்வேறு களங்களைக்கொண்டது. சிதம்பரத்திலே நாம் உண்மையில் தோற்கவில்லை. அங்கிருந்து எத்தனையோ படைக்கலன்களைப் பெற்றுள்ளோம்.

இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியனை சிதம்பரம் மண்ணிலுள்ள அண்ணமலைப் பல்கலைக் கழகத்திலிருந்துதான் பெற்றோம். பேராசிரியர் அன்பழகன், வழக்கறிஞர்கள் தில்லை வில்லாளன், சாமிநாதன், இளம் வழுதி தோழர்கள் அரங்கண்ணல், முல்லை சத்தி எஸ். டி. சோமசுந்தரம் இப்படிப்பட்ட எண்ணற்ற வைரமணிகள் உண்டு. எத்தனை ஆயிரம் ஓட்டுகளுக்கு இவர்களை இணை காட்டுவது?

பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன்புஇதேசிதம்பரம்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு ஆறு மாதம் நடந்துள்ளேன். கோர்ட்டிற்குள் குற்றவாளிக் கூண்டில் முன் நின்றிருக்கிறேன். அநாதைப்போல, கேட்பாரற்று, கவனிப்பாரற்று, ஒரு ஆறுதல்மொழிகூட சொல்வதற்கு ஆள் இல்லாமல் இருந்தது. நான் படித்த அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில. நான் நடமாறுவதால் நமது கொள்கை பரவிவிடும் என்று, அந்தக் கல்லூரியின் ஐந்து மைல் சுற்றளவிற்கு நான் வசிக்கக்கூடாது என்று தடையுத்தரவு போட்டனர்.

அந்த ஊரில், அந்த வட்டாரத்தில், நமது உயரினுமினிய கொள்கைகளுக்கு, நாம் சிரமத்தைச் சகித்துக் கொண்ட இலட்சியத்திற்கு, தி. மு. க. விற்கு நாற்பதாயிரத்து நானூறு நண்பர்கள்! அதற்கு சட்டசபை உறுப்பினர் அந்தஸ்தை பெற்றுத் தரும் ஆற்றல் இல்லாமல் இருக்கலாம். ஆனல் அந்த எண்ணிக்கை போதிக்கும் பாடம் விடுதலை இயக்கத்தின் வரலாறுகளில் பக்கத்துக்கு பக்கம் உள்ளது. கண்ணும் கருத்தும் உள்ளவர்களுக்குத் தெரியும், கருத்துக் குருடர்களுக்குத் தெரியாது என்ருல் அது நம் குற்றமல்ல,

****

கவனத்திற்கு

★

கலைஞன் தொலை பேசி எண் 83423 ஆக மாற்றப்பட்டுள்ளது.

****

"தலைநகர், தலைநகரே!"

கடந்த சனி, ஞாயிற்றுகிழமைகளில் நடைபெற்ற சென்னை மாவட்ட தி. மு. க. மாநாடு எல்லா சிரும் சிறப்புகளையும் பெற்று இதுவரை நடைபெற்ற மாவட்ட மாநாடுகளிலேயே முதலிடத்தை பறித்துக் கொண்டது.

வெள்ளிக் கிழமையன்று மயிலாப்பூர் மந்தை வெளியில், ஐம்பதாயிரம் மக்களுடன் துவங்கிய ஊர்வலம் மாநாட்டுப் பந்தலை அடையும்போது ஒரு லட்சத்தை எட்டியது. ஊர்வலத்தின் உணர்ச்சி வெள்ளமும் மக்கள் வெள்ளமும் ஒன்றையொன்று போட்டியிட்டன.

மாநாட்டன் மிச்சத்தொகை புரட்சி நடிகர் எம். ஜி. ராமசந்திரன் அவர்கள் அளித்த ரூ. 5000 நன்கொடையுடன் ரூ. 35,000 ஆக உயர்ந்தது, கோவை, திருவாரூர் தலைநகர், தலைநகர்தான் என்பதை நிருபிப்பதால் அமைந்திருந்தது.

மாவீரர் பாலசுப்பிரமணியம் பந்தலில், மொய்தீன்பிச்சை அரங்கில் ஆரம்பமான மாநாட்டை நமது அருமை நண்பரும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் விடுதலை இயக்கத்திற்கு அளித்த ஒப்பற்ற நல்மணியும், அண்ணாவின் 'திராவிடநாடு' ஏட்டின் மூலம் கடந்தபத்து ஆண்டுகளாக இடை விடாது, இணையற்ற எழுத்தோவியங்களை வழங்கிக் கொண்டு வரும் தலை சிறந்த எழுத்தாளரும், கொள்கை வீரருமான தோழர் இராம அரங்கண்ணல் திறந்து வைத்து பேசுகையில் நமது தியாகப் பட்டியலையும், எதிர்காலப் பணிகளையும் எடுத்துரைத்தார்.

" உலக வரலாற்றில் சுட்டுக் கொல்லப் பட்டவர்கள் உண்டு. தடியடிபட்டுச் செத்தவர்கள் உண்டு, ஆனால் காலால்மிதித்து சாகடிக்கப் பட்டவர்கள் இல்லை. நமது சென்னையில்தான், ஒரு அவர்களுக்கு கருப்புக்கொடி காட்டப்பட்டபோது நமது மொய்தீன்பிச்சையை காலால்மிதித்துக் கொன்றுர்கள். அப்படிப்பட்ட மொய்தீன்பிச்சையின் பெயரை இந்த அரங்கிற்குச் சூட்டியிருப்பது மிகப் பொருத்தமாகும்" என்று நண்பர் அரங்கண்ணல் கூறியபோது மாநாட்டில் கூடியிருந்தோரின் கண்களிலே நீர் தழும்பியது.

வளம் நிறைந்தவர்கள் சிலருக்கு பொது வாழ்வு நிலாச் சோருக அமைவதுண்டு. ஆனுல் வசதியான குடியில் தோன்றி, அது வறுமைக்கு ஆட்பட்ட நேரத்தில், அதனை தவிர்ப்பதற்கு ஈடுபடுத்த வேண்டிய உழைப்பை பொதுத்துறைக்கு, காணிக்கை யாக்குவதென்பது எல்லோராலும் முடியுக்கூடியதல்ல. சென்னை மாநாட்டின் தலைவர் தோழர் டி. கே. சீனுவாசன் அந்த வகையைச் சேர்ந்தவர். நல்ல குடும்பம். அது நொடிந்த நேரத்தில் அதனிடம் காட்டும் அக்கரையை விட கொள்கைத் தொண்டில் அதிகம் ஈடுபாடு காட்டினுர். இரயில்வே இலாகாவிலே அவர் ஆற்றி வந்த வேலையை 'ராஜினமா' செய்தார். அதைவிட நல்ல இடத்தைப் பெற்றுக் கொண்டு அல்ல, இன்னும் வாழ்க்கையை நிச்சயமற்றதாக்கிக் கொண்டு, அத்தகைய மௌனமான தியாகத்தை செய்தவர் — மெய்சிலிர்க்கப் பேசும் பேச்சுவித்தகர் "தமிழின் தலைசிறந்த நாவல்கள்" வரிசையில் இடம் பெறத்தக்க 'ஆடும் மாடும்' என்ற நூலின் ஆசிரியர், நண்பர் டி. கே. சீனுவாசன் அவர்களை தலைவராகத் தேர்ந்தேடுத்த மாவட்டக் கழகத்தின் சீர்தூக்கும் திறனை பாராட்டித்தான் ஆகவேண்டும். அவரது தலைமையுரையில் காங்கிரஸ் ஆட்சியின் அட்டுழியத்தையும், தென்னகம் படும் அவதியையும் படம் பிடித்துக் காட்டினுர்.

அறிஞர் அண்ணு அவர்கள் தமது ஒப்பற்ற உரையில் கலைத்துறைக்கும் நமக்கும் உள்ள தொடர்பினை விளக்கும்போது நடிப்பிசைப் புல்வர் கே. ஆர். இராமசாமி அவர்களின் தியாக சுபாவத்தையும் தொண்டு உள்ளத்தையும் பாராட்டினுர்,

"இதோ நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி இருக்கிருர். அவரை நான் சில நேரங்களில் அலுவலின் காரணமாக மறந்து விட்டாலும் இங்கே கூடியுள்ள நன்றிமறவாத தன்மையுள்ள மக்கள் மறக்கமாட்டார்கள். அவர் தூத்துக்குடி முதல் சென்னைத் துறைமுகப் பட்டினம்வரை கழகத்திற்காக நாடகங்கள் ஆடிவந்திருக்கிருர். அவர் போகாத ஊர் இல்லை. நாடகம் நடத்தாத நகரமில்லை. அவர் நடிக்காத நாடகமில்லை. அவரை அறியாத மக்கள் இல்லை. இருந்தாலும் அவர் வசிக்கும் வீடு சொந்த வீடல்ல, வாடகை வீடுதான்" என்று கூறிய வாசகங்கள் சினிமாக் கட்சி என்று நம்மைத் தூற்றுவோருக்கு அறைகூவலாயும் நமது சிந்தனையைத் தொடுவதாயும் இருந்தது,

ஞாயிற்றுக்கிழமை காலை மாநாட்டு மேடையில் அமர்ந்திருந்த லட்கியநடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் தோழர் மதியழகனிடம் சிதம்பரத்திலிருந்து வருகிறேன், இங்கு வர மனமேயில்லை. நூறு கிராமங்களுக்குமேல் சென்றேன். இந்த இரண்டு நாட்களும் அங்கேயே இருக்க விரும்பினேன் மாநாட்டினர் கோபித்துக்கொள்வார்களே என்று வந்தேன் என்று கூறினுர்.

அன்று மாலை நண்பர் இராசேந்திரன் கொள்கைப் பற்றுக் குறித்து "ஏரிக்கரையானுலும் சேரி, குப்பமானுலும் போகிற வழியிலே கல்லிருக்கும், முள்ளிருக்கும் என்ருலும் அங்கெல்லாம் நடந்து சென்று பிரச்சாரம் புரிந்து வந்துள்ளார்" என்று அறிஞர் அண்ணு கூறிய மொழிகள், ஒவ்வொருவர் உள்ளத்தையும் அண்ணு அவர்கள் எவ்வளவு தெளிவாக அறிந்துள்ளார்கள் என்பதைக் காட்டியது.

சென்னை மாவட்ட மாநாட்டின் முகப்பு

புரட்சி நடிகர் எம். ஜி. இராமசந்திரன் அவர்களின் வருகையால் மாநாட்டினர் பெரும் பரவசம் அடைந்தனர். அங்கே கடல்கடந்த தீவில் பதினுன்கு ஆண்டுகள் தனிமையாகஇருந்து விட்டு திரும்பும் தனையனைக் காணும் தாயின் மகிழ்வு கொட்டகையில் வழிந்தது. புரட்சி நடிகர் எம். ஜி. இராமசந்திரன் அவர்கள் குரலிலே இருந்த உறுதியும், தெளிவும், கொள்கையிலே அவருக்கு ஏற்பட்டுள்ள பிடிப்பை பளிச்சிட்டுக் காட்டியது.

இசைச் செல்வர் சி. எஸ், ஜெயராமன் அவர்களின் இன்னிசையும், நாகூர் அனிபா அவர்களின் பாடல்களும் நல்ல விருந்தாய் அமைந்தன.

கலைஞர் கருணுநிதி அவர்களும் மற்ற நண்பர்களும் நடித்துக் காட்டிய 'உதய சூரியன்' நாடகம், ஏற்கனவே நடந்த நாடகங்களை தோற்கடித்து தனிச் சிறப்புடன் அமைந்திருந்தது.

முகவரி
★
க. அறிவழகன், எம். ஏ.,
6, புதிய சோலையப்பன் தெரு
சென்னை-21

திருச்சி நாவலர் மன்றத்தினரின் "பரப்பிரம்மம்" நாடகம் இரண்டாம் நாள் நடித்துக்காட்டப்பட்டது:

மாநாட்டில் பல்லாயிரக் கணக்கான தாய்மார்கள் கலந்துக் கொண்டது ஓர் முக்கிய அம்சமாகும்.

உணவுப் பிரச்சினையில் காங்கிரஸ் ஆட்சியின் அலட்சியப் போக்குக் கண்டனம் தெரிவித்தும், போக்கு நீடிக்குமானுல் தக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுச் செயலாளரைக் கேட்டுக் கொண்ட தீர்மானம் மிக முக்கியமானதாகும்,

பொதுச்செயலாளர் அவர்களும் மற்ற சொற்பொழிவாளர்களும் நல்ல கருத்து விருந்து அளித்தனர், ஒரே ஒரு குறை கருத்து அளவைவிட கால அளவே முக்கியமாய் கருதப்பட்டதால், கருத்து வெள்ளத்தால் மாநாடு பெற்றிருக்க வேண்டிய அதிகமான இலாபத்தை அடைய முடியாமல் போய்விட்டது, கால அளவு, ஆள் அளவு ஆகியவற்றை கணக்கிடும் போக்குத் தொலைந்தாகவேண்டும். மாநாடு [illegible] இயககுபவர்கள், சொற்பொழிவாளர்கள், பேச்சுக்களை கேட்பவர் – அத்தனை பேரும் இந்த நிலை உருவாவதற்கு வருகிற நாட்களில் ஒத்துழைக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

தோழர். அ. பொ. அரசு அவர்கள் மேயராக தேர்ந்தேடுக்கப் பட்ட சமயம் "முதலில் தி. மு. க. உறுப்பினர், பிறகுதான் மேயர்" என்ற மனபான்மை கொண்டவர் என்று திட்டியிருந்தோம். அதைமெய்பிக்கும் வகையில் மேயர் அரசு அவர்களின் தொண்டு இந்த மாநாட்டிற்குப் பெருஞ் சிறப்பிற்கு முக்கிய காரணமாய் அமைந்தது என்பதை குறிப்பிடுகிருேம்.

தொண்டர் படைத்தலைவர் தோழர் தி. சு. நல்லதம்பி. உடையில் மட்டும் மிடுக்காகஇல்லாது இவ்வளவு பெரிய மாநாடு ஒழுங்கு முறையுடன் நடந்தேற நல்ல தொண்டாற்றியுள்ளார்.

வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் கோ. செங்குட்டுவன். செயலாளர்கள் கே. எம். கண்ணபிரான், இளஞ்சேரலாதன் ஆகியோர் இரவு பகல் பாராது, கண்துஞ்சாது இந்த எழிலுருவத்தைத் தீட்டிக் காட்டினர். அது என்றும் நம் நினைவில் தங்கும். அவர்கள் எல்லோரும் நமது பாராட்டுதலுக்கும் புகழ் மாலைக்கும் உரியவர்.

அச்சிடுபவர் : கே. இராசாராம், பி.ஏ., கஸ்தூரி லித்தோ ஒர்க்ஸ், 34, சின்னத்தம்பி தெரு, சென்னை–1.
ஆசிரியரும், வெளியிடுபவரும் : கே. ஏ. மதியழகன், பி.ஏ., 126, மவுண்ட் ரோடு, சென்னை–6.